
தினமணி

முட்டை கொள்முதல் விலை வரலாறு காணாத உயர்வு

First Published : 19 Jun 2012 02:19:03 AM IST



நாமக்கல், ஜூன் 18: நாமக்கல் மண்டலத்திலேயே வரலாறு காணாத அளவில் முட்டை கொள்முதல் விலை உயர்ந்துள்ளது. இதன்படி, திங்கள்கிழமை மீண்டும் 6 பைசா உயர்த்தப்பட்டு, முட்டை கொள்முதல் விலை ரூ.3.22 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடையால் கடந்த ஏப்ரல் மாதத்தில் நாமக்கல் மண்டலத்திலிருந்து முட்டை கொள்முதல் விலை உயரத் தொடங்கியது. இதன்படி, ஏப்ரல் தொடக்கத்தில் ரூ.2.15 ஆக இருந்த முட்டை கொள்முதல் விலை படிப்படியாக உயர்ந்து மே தொடக்கத்தில் ரூ.2.60 என்ற நிலையை எட்டியது. பிறகு, விலையேற்றம் சற்றே மந்தமடைந்ததன் காரணமாக மே மாத இறுதியில் ரூ.2.80ஆக விலையேற்றம் அடைந்தது.

ஜூன் 1-ம் தேதி 3 பைசா, ஜூன் 2-ல் 3 பைசா, ஜூன் 4-ல் 3 பைசா, ஜூன் 7-ல் 6 பைசா, ஜூன் 9-ல் 4 பைசா மற்றும் ஜூன் 11-ல் 5, ஜூன் 14-ல் 7 பைசா, ஜூன் 16-ல் 5 பைசா என உயர்த்தப்பட்டு, கடந்த சனிக்கிழமை ரூ.3.16ஆக விலை நிர்ணயிக்கப்பட்டிருந்து.

இந்த நிலையில், திங்கள்கிழமை நடைபெற்ற நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீண்டும் 6 பைசா உயர்த்தப்பட்டு முட்டை கொள்முதல் விலை ரூ.3.22 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலையேற்றம் நாமக்கல் மண்டல வரலாற்றிலேயே மிக அதிகம் என நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் செல்வராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியது:

இதற்கு முன் நாமக்கல் மண்டலத்தில் அதிகபட்சமாக ரூ.3.20 வரை முட்டை கொள்முதல் விலை உயர்ந்துள்ளது. இப்போது ரூ.3.22ஆக உயர்ந்திருப்பது வரலாற்றில் முதன்முறையாகும். ஜூலை

20-ம் தேதிக்கு பிறகு மீன்பிடிக்கத் தடை விலக்கப்படுவதை அடுத்து விலை குறைய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

எனினும், இந்த விலையேற்றம் பண்ணையாளர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை என்றே கூறப்படுகிறது. முட்டை கொள்முதல் விலை மிக அதிகளவு உயர்ந்துள்ள அதேவேளையில், தீவனங்களின் விலையும் பெருமளவில் உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த 3 மாதங்களில் சோயா புண்ணாக்கு விலை ஒரு டன் ரூ.16 ஆயிரத்திலிருந்து ரூ.32 ஆயிரமாகவும், மக்களாச்சோளம் 100 கிலோ ரூ.900லிருந்து ரூ.1250ஆகவும் உயர்ந்துள்ளது.

இந்தத் தீவன விலையேற்றத்தை ஒப்பிடுகையில் முட்டை கொள்முதல் விலை உயர்வால் பண்ணையாளர்களுக்கு எவ்விதப் பலனும் கிடைக்கப் போவதில்லை என்று பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்: சென்னை ரூ.3.25, பெங்களூர் ரூ.3.20, மைசூர் ரூ.3.16, ஹைதராபாத் ரூ.2.97, மும்பை ரூ.3.27, விஜயவாடா ரூ.2.99, கொல்கத்தா ரூ.3.40, பர்வாலா ரூ.2.90, தில்லி ரூ.3 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இலவச பச்சைப்பயறு சிறுதளை விநியோகம்

First Published : 18 Jun 2012 01:22:26 PM IST

பண்ருட்டி, ஜூன் 17: தோட்டக்கலைத் துறை சார்பில் இலவச பச்சைப்பயறு சிறுதளை வழங்கும் விழா பண்ருட்டியில் அண்மையில் நடந்தது.

÷புயல் பாதித்த முந்திரி பயிரிடும் விவசாயிகளுக்கு 8 கிலோ கொண்ட சிறுதளை பச்சைப்பயறு பை மேலிருப்பு கிராமத்தில் வழங்கப்பட்டது.

÷மேலிருப்பு ஊராட்சி மன்றத் தலைவர் ஹேமாமாலினி பாபு தலைமை தாங்கினார். பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மாலதி கமலக்கண்ணன் இலவச சிறுதளை பைகளை வழங்கினார். பண்ருட்டி வட்ட தோட்டக்கலை அலுவலர் என்.டி.ரவிசேகர் திட்டத்தின் செயலாக்கம் பற்றி விளக்கிப் பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் பி.பிரபாகரன் நன்றி கூறினார்.

## வேளாண் துறை வளர்ச்சி காண வேண்டும்: ஆட்சியர்

First Published : 18 Jun 2012 01:20:27 PM IST

சிதம்பரம், ஜூன் 17: மருத்துவத்துறை கண்டுள்ள வளர்ச்சியைபோல விவசாயத் துறையும் வளர்ச்சி காணவேண்டும் என மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ கேட்டுக்கொண்டார்.

÷சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்டம் டெல்டா விவசாயிகள் பாசன நீர் மேலாண்மை கருத்தரங்கு, அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்மை புல அரங்கில் சனிக்கிழமை நடந்தது.

÷கருத்தரங்கத்துக்கு தலைமை தாங்கி ஆட்சியர் பேசியது: விவசாயம் வளர்ச்சி கண்டு வருகிறது. வேளாண் பல்கலைக்கழகங்கள் பல்வேறு ஆராய்ச்சிகளை செய்துவருகிறது. வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப அனைவரும் செயல்பட்டு வேளாண்மையில் வளர்ச்சி காணவேண்டும். பாசன முறையில் அறிவியல் தொழில்நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்தினால் முன்னேற்றம் அடையலாம் என்றார்.

அலைபேசியில் பேசிய ரமணன்: இந்த கருத்தரங்கில் சென்னை மண்டல வானிலை மைய இயக்குநர் ரமணன் பங்கேற்கவில்லை. இருப்பினும் அலைபேசி மூலம் விவசாயிகளிடம் பேசினார். இதில் செயற்கைகோள் உதவியுடன் கணினி மற்றும் இணைய தளம் மூலம் வானிலை மாற்றங்களை கண்டறியும் வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்றார்.

÷கூட்டத்தில் உழவர் மன்றத் தலைவர் கீர்த்திவர்மன், கடலூர் மாவட்ட உழவர் மன்ற கூட்டமைப்பு தலைவர் பி.ரவீந்திரன், பல்கலை வேளாண் புல முதல்வர் கதிரேசன், மாவட்ட வேளாண் இயக்குநர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## தேங்காய் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிப்பு

ஜூன் 19,2012,00:54




கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேங்காய் விளைச்சல் அதிகரிப்பால், அதன் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.பொள்ளாச்சி, ஈரோடு மாவட்டத்துக்கு அடுத்தபடியாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில், 20

லட்சத்துக்கும் அதிகமாக தென்னை மரங்கள் உள்ளன. விலைŒரிவு:இங்கு விளையும் தேங்காய், கர்நாடகா, ஆந்திரா, குஜராத் மாநிலங்களுக்கும், எண்ணெய் உற்பத்தி செய்ய காங்கேயத்துக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இரு மாதத்துக்கு முன்பு, ஒரு டன் தேங்காய், 14 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

தற்போது, மாவட்டத்தில் தேங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால், தேங்காய் விலை Œரிவடைந்துள்ளது.மற்ற மாநிலங்களிலும் தேங்காய் விளைச்சல் அதிகரித்து, அதன் விலை வீழ்ச்சிக்கு வழி வகுத்துள்ளது. தற்போது, ஒரு டன் தேங்காய் (சராசரியாக 3,000 தேங்காய்), 7,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.பாலகுறியைச் சேர்ந்த தென்னை விவசாயி முனியப்பன் கூறியதாவது:

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தால், தேங்காயை பறிப்பதற்கும், அதை சேகரித்துக் கொட்டவும் ஆட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கூலியும் பல மடங்கு உயர்ந்துள்ளது. பெண்களுக்கு, 150 ரூபாயும், ஆண்களுக்கு, 250 ரூபாயும் கூலி கொடுக்க வேண்டியுள்ளது. ஆட்கள் பற்றாக்குறை:தேங்காய் விலை குறைந்துள்ளதால், தென்னை விவசாயிகளும், வியாபாரிகளும் நஷ்டத்தில் உள்ளனர். தேங்காய் உரிக்க ஒரு தேங்காய்க்கு 40 காசு கொடுக்க வேண்டியுள்ளது. அதே நேரத்தில் தேங்காய் மட்டை விலை, 15 காசாக குறைந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.தேங்காய் பறிக்க ஆட்கள் இல்லாததாலும், தேங்காயை வாங்க வியாபாரிகள் வராததாலும் மண்டிகளில் தேங்காய்கள் லட்சக்கணக்கில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. காங்கேயத்திலும் விலை குறைந்துள்ளதால், அங்கும் தேங்காய் கொப்பரைகளை அனுப்ப முடியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## முட்டை விலை பன்மடங்கு உயர்வு

ஜூன் 19,2012,00:42



நாமக்கல்:தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 322 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வரலாற்றில் இது மிகவும் அதிகபட்ச விலையாகும்.நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 316 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட

முட்டை, 6 காசுகள் உயர்த்தி, 322 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.முட்டை விலை, மே இறுதியில் இருந்து ஏற்றமான சூழலில் இருந்தது.

அதன்படி மே 31ம் தேதி, 283 காசுகள் என, இருந்த முட்டை விலை, படிப்படியாக ஏற்றம் கண்டு வந்தது. அதையடுத்து நேற்று, 322 காசுகள் என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன், கடந்த 2011 டிச., 26ம் தேதி முட்டை விலை அதிகபட்சமாக, 320 காசுகள் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது."கோழித்தீவனம் உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை ஏற்றம், கேரளா மாநிலத்திற்கு அதிகளவு முட்டை விற்பனைக்கு செல்லுதல் போன்றவை, முட்டை விலை ஏற்றத்துக்கான காரணம். இதன் விலை மேலும், உயர வாய்ப்புள்ளது' என, கோழிப்பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## நாவல் பழ விலை கடும் உயர்வு

ஜூன் 18,2012,15:33



நெல்லை: நாவல் பழம் கிலோ ரூ.240க்கு விற்பனை செய்யப்படுகின்றது. பழங்களில் அதிக மருத்துவ குணம் கொண்டது நாவல் பழம். சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு இது பரிந்துரை செய்யப்படுகின்றது. ஜூன், ஜூலை மாதங்களில் அதிக அளவில் உற்பத்தியாகி நாவல் பழம் விற்பனைக்கு வரும். தற்போது போதிய விளைச்சல் இல்லாததால் சீசன் தொடங்கியும் குறைந்த அளவிலான நாவல் பழங்கள் தான் விற்பனைக்கு வருகின்றன. பெங்களூரில் இருந்து நெல்லைக்கு நாவல் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. முதல் ரக நாவல் பழம் கிலோ ரூ.250க்கும், அடுத்த ரக பழம் கிலோ ரூ.160க்கும் விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு ரூ.200க்கு விற்கப்பட்ட முதல் ரக நாவல் பழம் தற்போது ரூ.50 வரை அதிகரித்துள்ளது. விலைவாசி உயர்வு மற்றும் உற்பத்தி குறைவால் இந்த விலையேற்றம் ஏற்பட்டுள்ளது.

## தீவனத்திற்கான புதிய ரக புற்கள் முழு மானியத்தில் பயிரிட வரவேற்பு

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2012,01:51 IST

அவலூர்பேட்டை: விழுப்புரம் மாவட்டத்தில் பசுந்தீவனத்திற்காக புதியதாக பயிரிட்டுள்ள "கோ-3 ரக புல்' வகையினை கால்நடைத் துறை கூடுதல் இயக்குனர் ஆய்வு செய்தார்.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் மத்திய, மாநில அரசின் தீவன அபிவிருத்தி திட்டத்தில் பலர் கோ-3 ரக புற்களை பயிர் வைத்துள்ளனர். இந்த பயிர்களை சென்னை கால்நடைத் துறை கூடுதல் இயக்குனர் மணிவண்ணன், உதவி இயக்குனர் குருவய்யா ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். டாக்டர்கள் மோகன், மணிமாறன் உடனிருந்தனர்.

ஆய்விற்கு பின் கூடுதல் இயக்குனர் மணிவண்ணன் கூறியதாவது: இலவச கறவை மாடுகளின் பசுந்தீவன பற்றாக்குறையை போக்க இந்த திட்டம் ஏற்படுத்தப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் கடந்தாண்டில் 500 ஏக்கர் அளவில், " கோ-3 ' புல் வகை பயிர் செய்யப்பட்டது. இந்தாண்டு 1000 ஏக்கர் அளவில் பயிரிட திட்டமிட்டுள்ளோம். இது குறித்து கால்நடை துறை மருத்துவர்களை அணுகி விவசாயிகள் விபரங்களை கேட்டு பெறலாம்.

இத்திட்டத்தில் 25 சென்ட் முதல் ஒரு ஏக்கர் வரை பயிரிடலாம். இதற்காக அரசு 25 சென்டிற்கு 3 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறது. புல் கருணை, உரம், உழவு உள்ளிட்டவை இந்த மானியத்தில் அடங்கும்.இது நூறு சதவீதம் மானியமாகும். ஒரு முறை இந்த புல்லை பயிர் வைத்தால், மாடுகளுக்கு தீவனத்தை வெட்டியபடி தொடர்ந்து 5 ஆண்டுகள் வரை வழங்கலாம். புல் வளர்ந்து கொண்டே இருக்கும்.

இதனால் தீவன செலவு குறையும், பாலின் அளவு அதிகரிக்கும். இது குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். மானாவாரி சோளம், மக்கா சோள தீவன பயிர் உற்பத்திக்கும் இந்தாண்டு 1000 ஏக்கர் ஒதுக்கீடு செய்துள்ளோம். இதில் 25 சென்ட் பயிருக்கு மானியமாக 1350 ரூபாய் அரசு வழங்குகிறது.

இந்த மானிய திட்டங்களில் பயனாளிகளின் தேர்வு விரைவில் நடக்க உள்ளது. இதனால் விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருத்துவர்களை அணுகி விண்ணப்பிக்கலாம். இவ்வாறு கூடுதல் இயக்குனர் மணிவண்ணன் கூறினார்.

## பசுமை வீடுகள் கட்டும் திட்டம் பயனாளிகள் தேர்வு நிறுத்தம்

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,23:23 IST

கம்பம்:பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தில் பயனாளிகள் தேர்வை நிறுத்தி வைக்க, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அ.தி.மு.க., அரசு பொறுப்பேற்றவுடன், பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தில் ஒவ்வொரு பயனாளிக்கும், ரூ. 1.80 லட்சம் ஒதுக்கப்படும். அதில் ரூ. 30 ஆயிரத்தில் சோலார் மின் அமைப்பு ஏற்படுத்த வேண்டும். மீதமுள்ள ரூ. 1.50 லட்சம் பல தவணைகளாக வழங்கப்படும்.சம்பந்தப்பட்ட ஊராட்சி தலைவரின் பரிந்துரை மற்றும் கிராம சபை கூட்டத்தின் ஒப்புதலை பெற்று நடப்பு ஆண்டிற்கான பயனாளிகள் தேர்வு நடவடிக்கைகள் துவங்கின. ஒன்றிய கவுன்சிலர்கள், மாவட்ட கவுன்சிலர்கள் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தில் தங்களுக்கும் "பங்கு' கேட்டனர். ஊராட்சி தலைவர்களோ, தர மறுத்தனர். இதனால் தமிழகம் முழுவதும் பிரச்னை ஏற்பட்டது.

இதையடுத்த தமிழக அரசு பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தில் பயனாளிகள் தேர்வை நிறுத்தி வைக்குமாறு, ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. விரைவில் சட்டதிருத்தம் கொண்டு வந்து, அதன்பின் திட்டம் செயல்படுத்தப்படும் என தெரிகிறது.
தேனி மாவட்ட ஊராட்சி தலைவர்கள் கூட்டமைப்பின் பொருளாளர் தங்கப்பாண்டியன் கூறுகையில், " பசுமை வீடுகள் பயனாளிகள் தேர்வு ஊராட்சி தலைவர்களுக்குள்ள உரிமையாகும். ஒன்றிய கவுன்சிலர்கள் பசுமை வீடுகள் திட்டத்தில் பங்கு கேட்பதால், தற்போது அரசு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது' என்றார். அதிகாரிகளிடம் கேட்ட போது,எழுத்துப்பூர்வமாக எந்த உத்தரவும் வரவில்லை,என்றனர்.

## 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க தயங்கும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,23:22 IST

கம்பம்:கம்பம் பகுதியில் 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகள் தயக்கள் காட்டி வருகின்றனர்.தோட்டக்கலைத்துறையில் 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தர அரசு உத்தரவிட்டுள்ளது. துணை தாசில்தார் அந்தஸ்துள்ள அதிகாரி சான்றளிக்க வேண்டும் என்பது உட்பட பல நிபந்தனைகள் உள்ளது. மேலும் ஒருவருக்கு ஒரு ஏக்கருக்கு மட்டுமே மானியம் வழங்கப்படும். மீதமுள்ள நிலங்களுக்கு 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும். இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ரூ. 43 ஆயிரத்து 816

மட்டுமே வழங்கப்படுகிறது. ஆனால் நிலத்தை அளந்து, சொட்டு நீர் பாசனம் அமைக்கும் போது, கூடுதலாக வரும் பகுதிக்குரிய பணத்தை, சம்பந்தப்பட்ட விவசாயிகள் தர வேண்டும் என்று அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர். இதனால் விவசாயிகள் 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க தயக்கம் காட்டுகின்றனர்.

## மல்லிகை சாகுபடி பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,23:22 IST

தேனி:காமாட்சிபுரம், சென்டெக்ட் விவசாய அறிவியல் மையம் சார்பில், மல்லிகை சாகுபடி குறித்த பயிற்சி சீலையம்பட்டியில் நடந்தது. திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். மல்லிகையை தாக்கும் மொட்டுப்புழுவில் இருந்து பாதுகாப்பது குறித்து அவர் பேசினார். மல்லிகை பூக்கள் தரம், இலை வழியாக நுண்ணூட்ட சத்து தெளிப்பது குறித்து தொழில் நுட்ப வல்லுநர் சரண்யா,தேவிபிரியா பேசினர். சீலையம்பட்டி, அய்யம்பட்டி, கோட்டூர் விவசாயிகள் பங்கேற்றனர்.

---

தினகரன்

## பல நூறு டன் நெல் விவசாயம் பாதிப்பு தென்மேற்கு பருவமழைக்கு காத்திருக்கும் விவசாயிகள் அரிசி விலை மேலும் உயரும்

பதிவு செய்த நேரம்:2012-06-18 12:03:17

உத்தமபாளையம்,: தென்மேற்கு பருவமழை தாமதத்தால் தேனி மாவட்டத்தில் பலநூறு டன் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் மட்டும் 14ஆயிரம் ஏக்கருக்கும் மேல் இர ண்டுபோக நெல் விவசாயம் நடக்கிறது. பெரியாறு தண்ணீர் மூலம் செய்யப்படும் விவசாயத்தால், ஆ ண்டு தோறும் பலநூறு டன் நெல் விளைகிறது. இவை அரசின் நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் தனியார் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயத்தை நம்பி ஆயிரக்கணக்கான விவசாய குடும்பத்தினர் மற்றும் கூலி தொழிலாளர்கள் உள்ளனர்.

இவர்கள் அனைவரை யும் தென்மேற்கு பருவமழை மிகுந்த கவலை கொள்ள செய்துள்ளது. பெரியாறு அணை நீர்மட்டம், தென்மேற்கு பருவமழை மூலம் தான் உயரும். இந்த ஆண்டு தென்மேற்கு பருவ ம ழை கண்ணாமூச்சி, காட்டி வருவதால், விவசாயிகள் கவலையில் உறைந்துள்ளனர்.

ஜூன் முதல் வாரத்திலேயே, தண்ணீர் திறக்கப்படும் என்று உத்தமபாளையம், சின்னமனூர், கம்பம், அனுமந்தன்பட்டி, க.புதுப்பட்டி, ராயப்பன்பட்டி, கூடலூர் பகுதி விவசாயிகள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர்.

இன்னும் தண்ணீர் திறக்கப்படாததால், தென்மாவட்டங்களில் நெல் உற்பத்தி தள்ளிப்போகும் நிறை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே அரிசி விலை மூடைக்கு ரூ.200 வரை உயர்ந்துள்ளது. நெல் விவசாயம் தள் ளிப்போவதால் வரும் காலங்களில் விலை மேலும் அதிகரிக்க கூடிய வாய்ப்பு உள்ளது.

அரிசி வியாபாரிகள் கூறுகையில், தென்மேற்கு பருவமழை பெய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் நெ ல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உரிய காலத்தில் வரக்கூடிய பல ஆயிரம் டன் நெல் உற்பத்தி தள்ளி போகிறது. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் வரக்கூடிய காலங்களில் அரிசி விலை உயரக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. சரியான பருவ காலங்களில் மழை பெய்யும் போது, விவசாய உற்பத்தி அதிகரிப்பதுடன், அனைத்து விளை பொருட்களும் மிக எளிதில் கிடைக்கும், என்றனர்.

## காய்கறி விலை கடும் உயர்வு கிலோவுக்கு ரூ.10 வரை அதிகரிப்பு

பதிவு செய்த நேரம்:2012-06-18 10:14:29

கரூர்: கரூர் பகுதியில் வரத்து குறைவு மற்றும் விளைச்சல் இல்லாததன் காரணமாக காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது. கிலோவுக்கு ரூ.10 வரை அதிகரித்துள்ளது.

மலைக் காய்கறிகளின் விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே இருக்கிறது. உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ், முட்டைகோஸ் போன்ற காய்கறிகள் மேட்டுப்பாளையத்தில் இருந்து கரூருக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரத்தை விட தற்போது மலைக்காய்கறிகள் கிலோவுக்கு ரூ.10 அளவுக்கு உயர்ந்து விட்டது. உழவர்சந்தைகளிலும் காய்கறிகளின் விலை அதிகமாகிவிட்டது. மலைக்காய்கறிகளில் மிகவும் விலை மலிவாக கிடைக்கும் முட்டைக்கோஸ் கடந்த வாரம் ரூ.30ஆக இருந்தது. நேற்று முட்டைகோஸ் ரூ.39 ஆக உயர்ந்து விட்டது. ரூ.54 ஆக இருந்த பீன்ஸ் ரூ.64 ஆகிவிட்டது. குறைந்திருந்த இஞ்சியின் விலை மீண்டும் அதிகரித்து ரூ.44க்கு விற்பனை செய்யப்பட்டது. ரூ.10க்கு விற்பனையான கத்தரிக்காய் ரூ.22 ஆகி விட்டது.

வெங்காயம் விலை கடந்த ஆண்டு ஏறுமுகத்தில் கிலோ ரூ.100ஐ தாண்டி விற்பனையானது.

ஏப்ரல் மாதம் ரூ.10 ஆக இருந்த சின்னவெங்காயம் கடந்த மாதம் ரூ.16, ரூ.20 என உயர்ந்து நேற்று சின்ன வெங்காயம் ரூ.26 ஆகவும், பல்லாரி வெங்காயம் ரூ.12ல் இருந்து ரூ.16ஆகவும் உயர்ந்துள்ளது. பிற காய்கறிகளின் விலையோடு ஒப்பிடுகையில் வெண்டைக்காய் கிலோ ரூ.16க்கு கிடைக்கிறது என உழவர்சந்தை வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர். உழவர் சந்தைகளிலேயே காய்கறிகளின் விலை உயர்ந்திருப்பதால் கடைகளில் இன்னும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. உழவர்சந்தையை விட கடைகளில் கிலோவுக்கு ரூ.15முதல் ரூ.20 வரை அதிமாக விலை வைக்கப்படுகிறது. காய்கறிகளின் விலை உயர்ந்து வருவதால் உணவு தயாரிப்புக்கு கூடுதல் செலவு ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.
காய்கறி வியாபாரிகள் கூறுகையில், ஒட்டன்சத்திரம், மேட்டுப்பாளையம் பகுதியில் இருந்து அதிக அளவில் வெங்காயம் வரத்து காரணமாக கடந்த 2 மாதத்திற்கு முன்னர் விலை சரிந்தது. தற்போது வரத்து இல்லை. இதேபோல தக்காளி உள்ளூரில் வரத்து காரணமாக 2 மாதத்திற்கு முன்பு ரூ.10க்கு விற்பனையானது. தற்போது ஓசூர், பெங்களூரில் இருந்து வரவழைக்கப்படுகிறது. எனவே விலை அதிகமாகிவிட்டது என்றனர்.

---

தினத் தந்தி

***காய்கறி விலை உயர்வால், மே மாதத்தில் சில்லரை விலை பணவீக்கம் 10.36 சதவீதமாக அதிகரிப்பு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் சில்லரை விலை*

பணவீக்கம் மே மாதத்தில் 10.36 சதவீதமாக உயர்ந்தது. இது, ஏப்ரல் மாதத்தில் 10.26 சதவீதமாக (மறு மதிப்பீட்டின்படி) இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இந்த பணவீக்கம் 0.1 சதவீதம் உயர்ந்துள்ளது. காய்கறி, சமையல் எண்ணெய், பால் விலை மிகவும் உயர்ந்துள்ளதே இதற்கு காரணமாகும்.

காய்கறி

நடப்பு ஆண்டு மே மாதத்தில், காய்கறி மற்றும் சமையல் எண்ணெய் விலை முறையே 26.59 சதவீதம் மற்றும் 18.21 சதவீதம் உயர்ந்துள்ளது. பால் பொருள்கள் விலை 13.74 சதவீதம் அதிகரித்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 10.50 சதவீதமும், சர்க்கரை விலை 5.38 சதவீதமும் உயர்ந்துள்ளது. தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் விலை முறையே 7.89 சதவீதம் மற்றும் 4.79 சதவீதம் உயர்ந்துள்ளது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கத்துடன் ஒப்பிடும்போது நுகர்வோர் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் மிகவும் துல்லியமானது என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நம் நாட்டில் மொத்த விலை பணவீக்கம் அடிப்படையில்தான் பாரத ரிசர்வ் வங்கி பணக் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வருகிறது. அதேசமயம், வெளிநாடுகளில் பெரும்பாலான ரிசர்வ் வங்கிகள் நுகர்வோர் விலை பணவீக்கத்தையே கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.

கிராமங்கள் – நகரங்கள்

நம் நாட்டில், 2012 ஜனவரியிலிருந்து மாதந்தோறும் நுகர்வோர் விலை பணவீக்கம் குறித்த புள்ளி விவரம் வெளியிடப்படுகிறது. இந்த பணவீக்கம் கிராமம், நகரம் மற்றும் நாடு ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வெளியிடப்படுகிறது. கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கான நுகர்வோர் விலை பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் முறையே 9.67 சதவீதம் மற்றும் 11.10 சதவீதமாக இருந்தது. இது, மே மாதத்தில் முறையே 9.57 சதவீதம் மற்றும் 11.52 சதவீதமாக உள்ளது.

## 2012–13 பருவத்தில் பருத்தி, கரும்பு விளைச்சல் சரிவடையும் என மதிப்பீடு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

எதிர்வரும் 2012–13 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) உணவு தானியங்கள் உற்பத்தி ஒட்டுமொத்த அளவில் 0.6 சதவீதம் உயர்ந்து 24.76 கோடி டன்னாக உயரும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. எனினும் முக்கிய பணப்பயிர்களான பருத்தி மற்றும் கரும்பு விளைச்சல் சரிவடையும் என இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது. இந்த இரண்டு பயிர்களின் சாகுபடி பரப்பளவு சரிவடையும் என்ற எதிர்பார்ப்பே இதற்கு காரணமாகும்.

புதிய பருவத்தில் கரும்பு விளைச்சல் 0.9 சதவீதம் குறைந்து 34.25 கோடி டன்னாக சரியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பருத்தி மகசூல் 7.8 சதவீதம் சரிந்து 3.22 கோடி பொதிகளாக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது (ஒரு பொதி 170 கிலோ). 2011–12 பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.50 கோடி பொதிகள் என்ற அளவில் வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்தது. அதே சமயம் தேவைப்பாடு இந்த அளவிற்கு உயராததால் விலை குறைந்தது. இதனால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. எனவே பல விவசாயிகள் லாபம் தரக்கூடிய மாற்றுப் பயிர்கள் சாகுபடியில் கவனம் செலுத்த தொடங்கியுள்ளனர்.

எனினும் நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு பருவத்தில் நிலக்கடலை உற்பத்தி 17 சதவீதம் சரிவடைந்து 69 லட்சம் டன்னாக குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் ஜனவரி–மே மாத காலத்தில் நிலக்கடலை விலை 20 சதவீதம் உயர்ந்துள்ளது.



கூடலூர் புளியாம்பாரை பகுதியில் சூறை காற்றில் வாழை மரங்கள் சரிந்து கிடப்பதை படத்தில் காணலாம்.



பந்தலூர்– பாட்டவயல் இடையே தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாலம் சரியும் நிலையில் உள்ள காட்சி.

### கூடலூர், பந்தலூர் பகுதியில் பலத்த மழை:

# வாழை, பாகற்காய் பயிர்கள் சேதம்; மின்சாரம் அடிக்கடி துண்டிப்பு

## பந்தலூர்–பாட்டவயல் இடையே வாகன போக்குவரத்து நிறுத்தம்

கூடலூர், ஜூன்.19-

கூடலூர் பகுதியில் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதால் விடிய விடிய சூறை காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் வாழை, பாகற்காய் செடிகள் சேதம் அடைந்தன. மேலும் பந்தலூர்- பாட்டவயல் இடையே தற்காலிக பாலம் சரியும் அபாயத்தில் உள்ளதால் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

### தாமதமாக தொடங்கிய பருவமழை

கூடலூர் பகுதியில் ஏப்ரல், மே மாதங்களில் கடும் வெயில் சுட்டெரித்தது. இதனால் நீர் நிலைகள், வனப்பகுதிகள் வறட்சியாக காணப்பட்டன. இதனால் கூடலூர் நகரில் கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவியது. இந்த நிலையில் ஜூன் மாத தொடக்கத்தில் தென்மேற்கு பருவமழை பெய்ய தொடங்கும் என விவசாயிகள் உள்பட பல தரப்பட்ட மக்கள் எதிர் பார்த்தனர். ஆனால் பருவமழை பெய்வ தில் காலதாமதம் ஏற்பட்டது.

இதனால் தென்மேற்கு பருவமழை பொய்த்து விடுமோ? என்ற அச்சம் விவசாயிகளிடையே எழுந்தது. ஆனால் கடந்த சில தினங்களுக்கு முன்பு கூடலூரை சுற்றியுள்ள மண்வயல், மரப் பாலம், தேவாலா, பந்தலூர் பகுதியில் பரவலாக பலத்த மழை பெய்தது. ஆனால் கூடலூர் நகர பகுதிகளில் மழை பொழியாமல் இருந்தது. மாலை நேரங்களில் மேக கூட்டங்கள் திரண்டு வந்து அவ்வப்போது சாரல் மழை மட்டுமே பெய்து வந்தது.

### விடிய விடிய பலத்த மழை

இந்த நிலையில் கூடலூரில் நேற்று முன்தினம் மதியம் 2 மணிக்கு பலத்த மழை பெய்ய தொடங்கியது. பின்னர் படிப் படியாக மழையின் வேகம் அதிகரித்து விடிய விடிய சூறைகாற்றுடன் பலத்த மழை கொட்டியது. இதனால் கூட லூர், பந்தலூர் தாலுகா பகுதிகளில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

நேற்றும் பரவலாக மழை பெய்ததுடன் கடுங்குளிர் நிலவியது. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. தென்மேற்கு பருவமழை பெய்ய தொடங்கி உள்ளதால் கூடலூர் பகுதி விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

### வாழை, பாகற்காய் பயிர்கள் சேதம்

இதனிடையே சூறை காற்றுடன் பலத்த மழை பெய்ததால் கூடலூர் அருகே உள்ள மரப்பாலம், கம்மாத்தி பகுதியில் ஏராளமான வாழை பயிர்கள் மற்றும் பாகற்காய் கொடிகள் அடியோடு சரிந்து விழுந்தன. இதனால் வாழை, பாகற்காய் விவசாயிகள் மத்தியில் கவலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து கூடலூர் பகுதியில் பலத்த மழை நீடித்து வருகிறது.

பந்தலூர் தாலுகா பகுதியிலும் பலத்த மழை பெய்து வருகிறது. பந்தலூரில் இருந்து பாட்டவயல் செல்லும் சாலையில் பெக்கி என்ற இடத்தில் ஆற்றில் குறுக்கே புதிய பாலம் கட்டும் பணி நெடுஞ்சாலை துறை மூலம் நடைபெற்று வருகிறது. இதையொட்டி வாகனங்கள் செல்ல அதன் அருகில் தற்காலிக பாலம் மணல் மூடைகள் மூலம் கட்டப்பட்டு இருந்தது.

### சரியும் அபாயம்

இந்த நிலையில் பலத்த மழையின் காரணமாக அந்த பகுதியில் ஓடும் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தண்ணீர் தற்காலிக பாலத்தின் மேல் ஓடியதால் மணல் மூடைகள் சரியும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக பந்தலூர்- பாட்டவயல் இடையே வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளது. அந்த பகுதியினை கூடலூர் எம்.எல்.ஏ. திராவிட மணி பார்வையிட்டு, ஆய்வு நடத்தினார்.

நீலகிரி மாவட்ட தலைநகர மான ஊட்டியிலும் நேற்று முன்தினம் மதியம் முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் ஊட்டி நகரில் கடுங்குளிர் நிலவுகிறது. மேலும் மழையினால் அடிக்கடி மின் தடையும் ஏற்பட்டு வருகிறது.